(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திரு. என்.ஆர். ரெங்கராஜன் மற்றும் திரு. எஸ். ஜான் ஜேக்கப் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

கூட்டுறவுக் கடன் சங்கம்

***37790—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் வட்டம், செம்போடை கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காக நான் என்று வாழ்ந்து வரும் இந்தியப் பெருநாட்டில் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நான் விடையினை அளிக்கிறேன்.*

முற்பகல் 10-35

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதியில் செயல்பட்டு வந்த செம்போடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல் இழந்த நிலையில் 8-10-1999 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. இருப்பினும், இப்பகுதி மக்களுக்குத் தேவையான பயிர்க் கடன் உள்ளிட்ட அனைத்து அரசு சலுகைகளும், அருகில் உள்ள கத்திரிபுலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், புதியதாக ஒரு தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவுக் கடன் சங்கத்தைத் தொடங்க வேண்டுமெனில், அதன் விவகார எல்லையில் குறைந்தபட்சம் 2,000 ஹெக்டர் சாகுபடி நிலப் பரப்பு இருக்க வேண்டும் என்பது அரசு விதி. ஆனால், செம்போடை பகுதியில் 975 ஹெக்டேர் நிலப்பரப்பு மட்டுமே உள்ளது. எனவே, செம்போடை கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னிவள நாட்டின் புகழ்வளர் செல்வியே, மின்னலாய் விரைந்து மீனவர் நலன் காக்கும் தெய்வமே, மக்கள் சேவையில் மங்காப் பெயர் பெற்ற தாயே, வஞ்சக வலை அறுத்து நெஞ்சக வலிமையால் நிமிர்ந்து நடைபோடும் நேர்மையின் சின்னமே, (மேசையைத் தட்டும் ஒலி) மண்டுகின்ற புகழால் எதிரிகளை மண்டியிடச் செய்யும் மாண்புமிகு பெண்ணரசே, 2016 மட்டுமல்ல, எதிர்காலத்திற்கும் திருவரங்கத்தை எடுத்துக்காட்டாக்கிய வெற்றித் தேவதையே, (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் தமிழக மக்களின் இதய சிம்மாசனத்தின் முதல்வரே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில், செம்போடை கிராமத்தில் இயங்கிவந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1999 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டுவிட்டது. 5,124 மக்கள் தொகை கொண்ட அந்தக் கிராமம் முற்றிலும் வேளாண்மைப் பயிராகிய மா, முந்திரி மற்றும் நெல் சாகுபடியில் சிறந்து விளங்குகிறது. அந்த செம்போடை கிராமத்தில் மீண்டும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்க வேண்டும் என்பது அந்தக் கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

2015 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதியில் செயல்பட்டுவந்த செம்போடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1993 ஆம் ஆண்டு முதல் 6 ஆண்டு காலம் எந்தவொரு செயல்பாடும் இல்லாமல் முற்றிலும் செயலிழந்த நிலையில் இருந்ததால் 8-10-1999-ல் கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்ட சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்த 685 பேர்களும் அதன் அருகில் இருக்கின்ற கத்திரிபுலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்துடன் இணைத்து, தற்போது வரை பயிர்க் கடன் உள்ளிட்ட அனைத்து அரசு சலுகைகளும் தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றன. கத்திரிபுலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் செம்போடை கிராமத்திற்கும் இடையே 3 கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. குறிப்பாக அரசின் விதிப்படி ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஆரம்பிக்க அதனுடைய விவகார எல்லைக்குள் குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் அல்லது 4,850 ஏக்கர் பயிர் செய்யக்கூடிய நிலப்பரப்பும், மொத்த உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 60 சதவீதம் பேர் கடன் பெறும் உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், குறைந்தபட்சம் ஓர் ஆண்டிற்கு 2 கோடி ரூபாய் அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்கினால்தான், 5 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்ட முடியும். அப்படி இருந்தால்தான் செலவுகளை ஈடு செய்ய முடியும் என்பது விதி. எனவே, மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவு செய்தால் மட்டுமே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் துவங்க அனுமதிக்கப்படுகிறது. மேலும், தற்போது செயல்பட்டு வரும் கத்திரிபுலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை இரண்டாகப் பிரித்தால் இச்சங்கமும் நலிவடைந்து செயலிழந்துவிடும். மேலும், செம்போடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமும் செயலிழந்துள்ளதால் மீண்டும் தொடங்க வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

முற்பகல் 10-40

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்போடை கிராமத்தில் 975 ஹெக்டேர் விவசாய நிலம் சாகுபடியில் உள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் 75-ம், ஆடவர் சுய உதவிக் குழுக்கள் 15-ம் செயல்பட்டு வருகின்றன. கத்தரிபுலம் கிராமம் என்பது செம்போடையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. எனவே, கிராம மக்களின் தேவையை அறிந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை செம்போடை கிராமத்தில் அமைத்துத் தர வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். விவசாய மக்களின் வாழ்வில் அக்கறை கொண்ட, மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு செயல்படுகின்ற அம்மாவின் அரசு, இதனைச் செய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் தேத்தாக்குடி தெற்கு ஊராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, கட்டட வேலை நடந்து வருகிறது. அதற்கும் மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

37—

தூர் வாருதல்

***35059—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—